**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம்; மாவட்ட மறுவாழ்வு மையம், செங்கல்பட்டு; மனவளர்ச்சி குன்றியோருக்கானஅரசு நிறுவனம், தாம்பரம்; மறுவாழ்வு மையங்கள் மற்றும் முன்பருவப் பள்ளிகள் மற்றும் சிறப்புப் பள்ளிகளில் உள்ள தற்காலிக பணியிடங்களுக்கு 01.07.2013 முதல் 31.12.2017 வரை உள்ள காலத்திற்கு பணித் தொடராணை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1டி) எண்: 7** **நாள்: 01.02.2017**
**துன்முகி – தை, 19**
**திருவள்ளுவர் ஆண்டு, 2048**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1(1)) துறை, நாள் 01.03.2011.
2. அரசாணை (நிலை) எண்.85, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1(1)) துறை, நாள் 04.07.2012.
3. அரசாணை (நிலை) எண்.45, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1(1)) துறை, நாள் 21.05.2013.
4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித எண்.4345/நிர்–2/2013, நாள் 10.10.2013, 08.05.2014 மற்றும் 10.03.2016.

-------

**ஆணை**:

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகத்திற்கு, புதிதாக மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு இணை இயக்குநர் (Joint Director) பணியிடமும், (சம்பளம் ரூ.15600–39100+தர ஊதியம் ரூ.7600/–) மற்றும் முதன்மை கல்வி அலுவலர் நிலையில் ஒரு துணை இயக்குனர் (Deputy Director) பணியிடமும், (சம்பளம் ரூ.15600–39100+தர ஊதியம் ரூ.6600/–) ஆக இரண்டு புதிய பணியிடங்களை, அப்பணியிடங்களில் பணியாளர்கள் நியமனம் செய்யும் நாள் முதல் ஓராண்டிற்கு அல்லது அவற்றின் தேவை முடிவுறும் நாள் வரை அல்லது இவற்றில் எது முந்தையதோ அதுவரை ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம், செங்கல்பட்டு மாவட்ட மறுவாழ்வு மையம், மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம், தாம்பரம் மற்றும் அனைத்து சிறப்புப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள 393 தற்காலிக பணியிடங்களுக்கு 01.07.2011 முதல் 30.06.2013 வரையிலான காலத்திற்கு பணித்தொடராணை வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

[த.பி.பா.]

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பள்ளிக் கல்வித் துறை மூலம் நிரப்பப்படவேண்டிய முதன்மைக் கல்வி அலுவலர் நிலையில் உள்ள துணை இயக்குநர் பணியிடத்தை Decadre செய்தும், மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகத்தில் பணியாற்றும் உதவி இயக்குநர்/ உதவி இயக்குநர் நிலையில் உள்ள அலுவலர்களில் முதுநிலைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ள திருமதி கு.சரளா, பேச்சுப் பயிற்சியாளர் அவர்களுக்கு தமிழ்நாடு பொதுப் பணி விதிகள் 10(a)(i)–ன்படி தற்காலிகமாக துணை இயக்குநர் (சம்பளம் ரூ.15600–39100 + தர ஊதியம் ரூ.6600/–) பதவி உயர்வு அளித்தும் அரசு ஆணையிட்டுள்ளது.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம், செங்கல்பட்டு மாவட்ட மறுவாழ்வு மையம், மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம், தாம்பரம் மற்றும் அனைத்து சிறப்புப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள 393 தற்காலிக பணியிடங்களுக்கு பணித்தொடராணை வழங்கி வெளியிடப்பட்டுள்ள அரசாணை ஜூன் மாதம், 2013 அன்று முடிவுற்றதனால், மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம், அரசு சிறப்புப் பள்ளிகள், மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம் மற்றும் முன்பருவப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள தற்காலிகப் பணியிடங்களுக்கும் 01.07.2013 முதல் 30.11.2015 வரையிலான காலத்திற்கு சம்பளம் கொடு ஆணை வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி 393 தற்காலிக பணியிடங்களுக்கு 01.07.2013 முதல் 30.06.2015 வரையிலான காலத்திற்கு பணித்தொடராணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. மேற்படி, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை அரசு பரிசீலனை செய்து, அதனை ஏற்று, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகம்; செங்கல்பட்டு மாவட்ட மறுவாழ்வு மையம்; மனவளர்ச்சி குன்றியோருக்கான அரசு நிறுவனம், தாம்பரம் மற்றும் அரசு பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகள், காது கேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகள் மற்றும் முன்பருவப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள தற்காலிகப் பணியிடங்களுக்கும் 01.07.2013 முதல் 31.01.2017 வரையிலான காலத்திற்கு சம்பளம் கொடு ஆணை வழங்கப்பட்டுள்ள நிலையில், மேற்படி நிறுவனங்கள் மற்றும் சிறப்பு பள்ளிகளில் உள்ள 49 காலிப் பணியிடங்கள் நீங்கலாக இணைப்பு–IIIல் குறிப்பிடப்பட்டுள்ள 344 நிரப்பப்பட்டுள்ள தற்காலிக பணியிடங்களுக்கு மட்டும் 01.07.2013 முதல் 31.12.2017 வரையிலான காலங்களுக்கு இணைப்பு–IIIல் கண்டுள்ள விவரப்படி பணித் தொடராணை வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும் காலிப் பணியிடங்களை பொறுத்தவரை தேவை ஏற்படும் சமயத்தில் புத்தாக்க ஆணை (Revival Order) பெற்ற பின்னரே நிரப்பப்படவேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித்துறையின் இசைவுடன் அத்துறையின் அலுவல்சாரா எண்46036/நிதி(சந)/2016, நாள் 23.01.2017–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை-78.(இ)
தலைமைக் கணக்காயர் (இருப்பு), தலைமைச் செயலகம், சென்னை–9 (இ)
மாநில கணக்காயர், சென்னை -18 / பெயரில். (இ)

[த.பி.பா.]

சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35. (இ)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள், (இ)
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள். (இ)

**<u>நகல்</u>**:
நிதித் (சந) துறை, சென்னை -9. (இ)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்